அதை எவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதை உடனடியாகக் கட்டுவதற்காக நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். A new hospital building 24 படுக்கைகள் கொண்ட Out-patient blocks, operation theatre, X-ray block, மற்றும் Kitchen block இவைகளெல்லாம் சேர்ந்து 10.63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். அதுமட்டுமல்லாமல் இதிலே Assistant Surgeons 2, Nurses 3, Auxiliary mide-wife இவைகளிலெல்லாம் யார் யாரை நியமிக்க வேண்டுமென்பதையும் அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது. ஆகவே, இந்த மருத்துவமனை, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமாசம் அவர்கள் எழுப்பிய வினாவிற்கிணங்க நிச்சயமாக விரைவில் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனை

* 883 வினா.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை காசநோய் மருத்துவமனையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு ஒரு படுக்கைக்கு மட்டும் பணம் கட்டப்பட்டு வருவதை மாற்றி நிதி வசதியுள்ள ஒன்றியங்களில் அதிக அளவு 10 படுக்கைகள் வரை பணம் கட்ட அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை ஒரு தனியார் மருத்துவ மனையாகும். ஆதலால் அரசு எந்த முடிவும் எடுக்க இயலாது.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் காசநோய் மருத்துவ மனையாக இந்தப் பெருந்துறை காசநோய் மருத்துவமனை தொன்றுதொட்டு விளங்கி வருகிறது. அது தனியார் கையிலே இருக்கின்ற காரணத்தினால் அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்குக்கூடச் சரியாகச் சம்பளம் கொடுக்கப்படாமல் இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் சம்பளம் கிடைக்காத நிலை இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அதை அரசே எடுத்து அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கி அந்த மாவட்டங்

1981 ஏப்ரல் 25]

களிலே இருக்கக்கூடிய பல்வேறு நோயாளிகளுக்கும் வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தும் அளவிற்கு அரசு அதைக் கையகப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் எழுப்பிய அந்த வினாவிலே, அவர் இப்பொழுது இங்கே சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையையும் பல பேர்கள் பல நேரங்களிலே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கவனிப்பதற்கு முன்பாக ஒரு நல்ல வேலை செய்திருக்கிறோம். அது என்னவென்றால், அதற்காக ரூ. 1.5 இலட்சம் கிராண்ட்டாகக் கொடுத்துக் கொண்டிருந்தோம். பிறகு ரூ. 2 இலட்சம் கிரான்ட்டாக உயர்த்தியிருக்கிறோம். இப்பொழுது, இந்த ஆட்சியிலே ரூ. 5 இலட்சம் அரசாங்கம் அதற்கு மானியம் கொடுக்கின்றது. கொடுக்கின்ற நேரத்தில் சில விதிகளையும் நாம் விதித்திருக்கிறோம். இலவசமாகப் படுக்கைகளைக் கொடுக்கவேண்டும். அரசாங்கத்திலே பணியாற்றுகிறவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், இலவசமாகப் படுக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நாம் நிபந்தனை விதித்து, ரூ. 5 இலட்சம் கொடுத்திருக்கின்றோம். மாண்புமிகு கொறடா அவர்கள் அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா என்று கேட்கிறார்கள். எவ்வளவு செலவாகும், எவ்வளவு கமிட்மெண்ட் என்பதையெல்லாம் ஆராய்ந்து பிறகு, தீர யோசித்து எடுக்க வேண்டிய முடிவாக அது இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுப்பதற்கு ஆலோசனை செய்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அரசு எடுத்துக் கொண்டால், அதற்குரிய செலவை, பெரியார், கோவை மாவட்டத்திலே இருக்கிற எல்லா ஒன்றியங்களும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றன. அந்த நிலையில் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் இப்பொழுது ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தன்மை மாறியிருக்கிறது என்பதையும் ஆகவே அரசு அந்த மருத்துவமனையை எடுத்து நடத்த முடியாவிட்டாலும், அரசு எடுக்கின்றேன் என்று சொன்ன பிறகு ஒன்றியங்கள் பங்குத் தொகை செலுத்த வேண்டுமென்று சொன்னால், ஒன்றியங்கள் செலுத்துவதற்குத் தயாராக இருந்தால் அரசு எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உடனடியாக நாம் சொல்வதற்கில்லை. இப்பொழுது ஒரு படுக்கைக்காக ஒரு ஒன்றியம் ரூ. 1,000 கொடுத்துக் கொண்டிருக்கிறது.

முனிசிப்பாலிட்டியைப் பொறுத்தவரையில், 30 படுக்கைகள் போடுவதற்கென்று, அதற்கு ஒரு சீலிங் வைத்திருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் எடுத்துக் கொண்டால், எவ்வளவு செலவாகும்? ஒன்றியங்கள் அதற்கு எவ்வளவு கொடுக்கத் தயாராக இருக்கின்றன என்பதை யெல்லாம் நல்ல முறையிலே ஆராய்ந்து, தீர யோசித்து, நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த உணர்வு, அந்தக் கருத்து நாம் எடுக்கும் முடிவுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பெருந்துறை சானட்டோரியம் தமிழ் நாட்டிலே ரொம்ப முக்கியமான பெயர்போன சானட்டோரியம். அதற்கு இராமலிங்கம் செட்டியார் போன்ற மில் முதலாளிகள் ஏராளமான பணத்தைக் கொடுத்து, தனியாரால், நல்ல முறையிலே அந்த சானட்டோரியம் நடக்கிறது. அரசாங்கப் பணமும் அதற்கு நிறையக் கொடுக்கப்படுகிறது. அதிலே ஏராளமான நோயாளிகள், அதுவும் ஏழைகளாக இருக்கிற நோயாளிகள், சிபாரிசு இல்லாத நோயாளிகள் போனால் அங்கு படுக்கை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது, அது தனியாக, பெரியார் மாவட்டமாகப் போய்விட்டதால், கோவை மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஒரு சிறந்த காச நோய் மருத்துவ மனையை தனியாகக் கட்டினால் இங்கும் கஷ்டம் தீரும், அங்கும் கஷ்டம் தீரும். அந்த ஆலோசனையை அரசு முன்வைக்குமா? அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்களுக்கே தெரியும், கோயம்புத்தூர் மருத்துவ மனையிலேயிருக்கிற, தனியாக இருக்கிற டி.பி. பிரிவுகளை, இரண்டு பேரும் சேர்ந்துதான் பார்வையிட்டோம். அங்கேயும் இப்பொழுது டி.பி.-க்காக வைத்தியம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, அதை விரிவு படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும். ஆனால், இன்னொன்று, புதிதாக டி.பி. சானட்டோரியம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். அதை இப்பொழுது நான் கேள்வி நேரத்திலே சொல்வதற்கில்லை. என்றாலுங்கூட, அதையெல்லாம் என்ன என்று எழுதிக் கொடுப்பார்களேயானால் நிச்சயமாக ஆராய்வோம்.

நன்னிலம் அரசு மருத்துவமனை.

* வினா எண் 884.—திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசினர் மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் சிகிச்சைக்கூடம் புதிதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?